உ

சிவமயம்



அன்புத் தெய்வம்

# அமரர். திருமதி. பேரின்பராஜா கோமளவல்லி

அவர்களின் யாக்கை மறைவு குறித்த

## நினைவுத் தரிசனம்

2015.11.30

# சமர்ப்பணம்

பத்துத் திங்கள் சுமந்து பத்திரமாய் பெற்றெடுத்து
பாசமுடன் எமை வளர்த்து நன்னெறி காட்டி
இருளகன்ற வாழ்வு தந்து
இன்முகத்துடன் இன்சொல் பேசி
பார்புகழும் நிலை தந்து
பார்க்கும் இடமெல்லாம் தன் நினைவு தந்து
மனிதருள் மாணிக்கமாய் விளங்கி
மனம் நிறை வாழ்வு தந்து
அன்புடன் எமைப் பேணிக் காத்து
ஆண்டவன் நிழலடி சேர்ந்த
எங்கள் பாசமிகு தெய்வத்தின் பாதம் பற்றி
எம் கண்ணீர்த் துளிகளால் மலர் தொடுத்து
அவர் திருப்பாதங்களுக்கு அர்ப்பணம் செய்கின்றோம்.

கணவர்
பிள்ளைகள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

உ

சிவமயம்

# "எங்கள் அன்புத் தெய்வம்"

நெஞ்சகத்தின் நிறைபொருளாய்

உமதிருப்பு நித்தியமாய் நிறைந்திருக்கும்

பாசப் பிரவாகம்

26

11

1960



சொர்க்கப் பிரவேசம்

31

10

2015

அமரர்

## திருமதி. பேரின்பராஜா கோமளவல்லி

### திதி நிர்ணய வெண்பா

*நிகழும் மன்மத வருஷம் ஆனதொரு ஐப்பசியில்*
*திகழும் சுக்கில பஞ்சமியில் - வாழ்வரசி*
*கோமளவல்லி குலத்தினொளி - இப்*
*பார்நீங்கிச் சிவனோடிணைந்தார்.*

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

# பஞ்சபுராணம்

## விநாயகர்துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடுமதனாலே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விழைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையேயுன்னை சிக்கனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமேயோக
வெற்றமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனேஉன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாள் அற வீசிய
சண்டிக்(கு) அவ் அண்டத்தொடும் உடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்
கோயிலும் போனகமும் அருளிச்

சோதி மணி முடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி! போற்றி!

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# குலதெய்வங்களை வேண்டி



### தாய் வீட்டுப் பிள்ளையார்

ஆதிக்கு மூலமே தேவர் போற்றும்
அம்மா வீட்டுப் பிள்ளையாரே
உன்னயல் பிறந்து உன் கழல் தொழுத
கோமளவல்லியை ஆட்கொள்வாய் அரனே

### வெருகலம்பதியான்

வெருகலம்பதியுறை அருள் வடிவேலா
விண்பதமேறி தன் களையாற
உன் சேவடி தரிசனம் பெற்ற கோமளத்தாளை
சேர்த்தணைப்பாயே சித்திரவேலா

### ஈர்சிலம்பதியுறை செண்பக நாச்சியம்மன்

நாச்சியவள் நாமம் சொல்லி
நாள் தோறும் அழைக்கும்
நற் கோமளத்தாளை நற்பேறுதான் காண
நல்வளி காட்டுமம்மா..........

### மலையடி நாகதம்பிரான்

ஞாயிறு தோறும் உனை நம்பி வந்து
குடமெடுப்பாள் அவள் வரவு காணாமல்
படமெடுப்பாய் பால்மனது கோமளத்தை
பழுதின்றிப் பற்றிடுவாய் நாகதம்பிரானே

### சேனையூர் வீரபத்திரர் சுவாமி

விக்கினங்கள் நேர்ந்து விட்டால்
வீரபத்திரர் குறை என்பார்
நேர்த்தி வைத்துப் போற்றி வந்த - கோமளத்தை
நேர்வழிகாட்டி உன்னடி சேர்ந்தருள்வாய்

### வளவுக் காவல் வைரவர்

வலம் வந்து காவல் செய்த இறைவா
உனை உடன் வைத்துத் தொழுது வந்த
மனையாள் கோமளத்தை குலம்
காக்கும் பேறுதந்து உன்னடி சேர்ந்தருள்வாய்

### சீரடி ஷாயி நாதா

ஆயிரம் அதிசயம் நிறைந்த பாபா
உம்மை வாரந்தோறும் அழைத்த
பூமகள் கோமளத்தை சீரடி
சேர்த்தீரே சிவனடி சேர்த்தருள்வீர்

# பாசக் குலக்கொழுந்து
# திருமதி. பேரின்பராஜா கோமளவல்லி
# அவர்களின் சரிதை அகவல்.



இந்து சமுத்திரத்தின் நித்திலத்தின் முத்தான வளம் நிறைந்த சிவபூமியான திருகோணமலை மாவட்டத்தின் கொட்டியாபுரப்பற்று வயலும் வயல் சார்ந்த மருத நிலமாம் மல்லிகைத் தீவெனும் அழகிய ஊர்தனிலே வேளாளர் பரம்பரையில் வந்துதித்துப் புகழோடு வாழ்ந்த கோணாமலை நல்லதம்பி கரம்பிடித்த மாவட்டத்தின் எல்லைகாணும் வெருகலம்பதியில் ஆவினம் நிறைந்த பசுமை மருதமும் குறிஞ்சியும் சேர்ந்தமைந்த அழகிய பழம்பெரும் ஆறெய்த்தீவுதனில் சிந்துநாட்டு வேளாளர் குல முதற்குடியாம் சக்கரவர்த்திக் குடிபிறந்த துணையாள் கந்தப்பர் மாரிமுத்து தம்பதியர் தம் தவமகளாக அறுபதாம் ஆண்டின் இல்லறப் பேறாய் அவதரித்தாள் கோமளவல்லியாய். குடும்பத்தில் மூத்தண்ணன் கோணாமலை, நோக்கமணி, வேதாரணியமணி, பேரம்பலம், டிசயரெத்தினம், திருநாவுக்கரசு, டில்லிக்கிளி, நோகாம்பிகை, பரிவுடன் உடன் பிறப்புக்களாக மகிழ்ந்திருந்தனரே. தங்கமணி தான் விலக அதனடுத்துப் பெற்றோர் போக காலமது அண்மித்து பேரம்பலத்தான் அமரரானார். இப்போது எம்மை விட்டு நீயும் சென்றுவிட்டாய்.

குறைவில்லா வளத்துடன் குலம் போற்ற வாழ்ந்து செல்லக் குறும்புகளுடன் எழுத்தறிய பள்ளிசென்று அம்மா அப்பாவுடனும், அண்ணன்மார்களுடனும், சகோதரிகளுடனும் பாசப்பிணைப்புடன் அன்பு பெற்று வளர்ந்து வந்த இவள் எமது தாயைப் போன்று அழகான

நிறமும் அம்சமான தோற்றமும் நற்குணம் நிறையப் பெற்ற நங்கையானவளை நல்லறமான இல்லறம் நாடி வர பார் போற்றும் ஈர்சிலம்பதியின் சைவம் பேணும் வேளாளர் குடியின் பதிவாளர் காசிப்பிள்ளை செல்லம்மாள் தம்பதியின் மகனான பேரின்பராஜாவாகிய முறைமாமன் மகனை ஒருமனம் கொண்டு 22.08.1980 திருமணம் செய்து மட்டுநகர் வீதி மாவடிச்சேனையில் புதுமனை கட்டி இல்லறத் தேரை இனிதே செலுத்தி சீரும் சிறப்புமாய் அட்டகத் திருப்பேறுகளாய் மேனகா, கிருஷ்ஷாந்தி, சுலோசனா, கிரிஷா, வனஜாவுடன் ஜெகதீஷ் என்னும் ஒற்றைப் புத்திரனுடன் விஜி, சுஜியந்தினி எனும் செல்வங்களை தன் வயிற்றில் சுமந்து தரணியில் வாழ வைத்த தாரகையிவள். மக்களைப் பெற்ற மகராசி மனங்கோணாமல் ஊர் போற்ற அன்பு காட்டி வாரி வழங்கும் வள்ளலாய், அன்னபூரணியாய் வாழ்ந்த இவள் புன்னகையால் எல்லோர் மனதிலும் இடம் பிடித்த பாசக்காரி. மல்லிகைத்தீவிலும் தந்தைவழி உறவுகள் மனங்களிலும் மறையாத நினைவுகள் பதித்தாள். பொறுமைக்கு இலக்கணமாய் திகழ்ந்த தீஞ்சுடராய் நல்ல இல்லாளாய் பெறற்கரிய தாயாய் வழிநடத்தி வாழ்ந்து வந்து மேனகாவிற்கு அண்ணர் மகன் கோபாலசிங்கத்தையும், அடுத்த மகள் கிருஷ்ஷாந்திக்கு அன்புவழிபுரம் சேரந்த மதுரனையும் திருமணம் செய்து வைத்து சிந்தை மகிழ்ந்திருந்து பேரப்பிள்ளைகளுடனும் முத்தமிட்டு வாழ்ந்து வந்தாள். "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகமாய்" வாழ்ந்து வந்த இவள் ஞாயிறு தோறும் நாகதம்பிரானை குடத்துடனும், பூக்கூடை கொண்டு வழிபட்ட தாயவள். கள்ளங் கபடமற்ற வெள்ளையுள்ளத்தாள். உறவினர் இல்லம் தோறும் உவகையுடன் செல்லாமல் உணவு இறங்காது இவளுக்கு. ஊரே உறவினராக்கிய உத்தமிக்கு சீரும் சிறப்பும் சேர்ந்து வரும் வேளை யார் கண்பட்டதுவோ, மாயமான நோயென்ற பொல்லாத சாட்டென பத்துநாள் படுக்கைதான் திருமலை

பொது வைத்தியசாலையில் வைத்தியர்களாலும் இயலவில்லை வந்துவிட்டான் காலனவன் பாசமாம் பற்றறுத்து பரமனிடம் செல்வதற்கு வேளை வந்ததென 2015.10.31 சனிக்கிழமை பி.ப 2.40 மணியளவில் பெற்ற பிள்ளைகளும் பெறாமக்களும் புலம்பிக் கதறியழ கணவரவர் கதிகலங்க, மருமக்கள் மனமுருக, பேரப்பிள்ளைகள் விம்மியழ, சகோதரர்களும் அவர்தம் பிள்ளைகளும் ஓவென்று ஓலமிட, உறவினர் சிந்தை கலங்க, சுற்றம் சூழ கண்ணீர் மல்க அன்புக்கரசியின் ஊனுடம்பாலயம் சரிந்தது பூமியில். சொந்தங்களைத் துறந்து சொர்க்கப் பிரவேசம் பூண்டனரே...... பிரிவுத் தாங்கொணா பெரும் துயருற்றோம். துடித்தோம், துவண்டோம் உன்போன்ற தாய் கிடைக்க பாக்கியம் செய்த உன் பிள்ளைகள் பரிதவிக்கும் நிலை கண்டு சித்தம் கலங்குதம்மா. சிவப்பேறு பெற்றிடுவாய் வாழ்க உன் நாமம் வையகம் உள்ள மட்டும். ஆன்ம சாந்திக்காய் இறைஞ்சுகின்றோம் நாமொன்றாய்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

தொகுப்பு:
திரு. நல்லதம்பி. கோணாமலை
(மூத்த அண்ணர்)
(ஓய்வு பெற்ற காணி உத்தியோகத்தர்)

# அன்புக் கணவரின் கண்ணீர் புலம்பல்

பாசக் குலக் கொழுந்தே கோமளமே......
குடும்பத்தின் குலவிளக்கே......
மனங்கோணா வாழ்வு தந்து
மனை காத்த மகராசி......

பொறுமையின் சிகரமாய் பூமிக்கு நிகராக
அடைக்கலம் தந்து அணைத்திட்ட ஆரமுதே
இணைந்தே இழுத்து வந்த வாழ்க்கை
வண்டிதனை இடைநடுவே விட்டு விட்டு
எங்கு நீ சென்று விட்டாய்?

நினைவுகளால் நிறைந்து விட்ட
நெஞ்சமது வேகுதடி
நீயில்லா வாழ்வெனக்கு
நிஜமில்லா விம்பமடி......

உன் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டுதல்லால்
என்செய்வேன் நானிங்கு
என்னவளே சாந்தி பெறு.

# தாங்க முடியவில்லை தாயே...
# தவிக்கின்றோம் பிள்ளைகள் நாம்

நாம் பெற்ற செல்வம் நீ அம்மா
நீ பெற்ற பிள்ளைகள் உனையிழந்து
உழறுகின்றோம் - தாயே தெவிட்டாத
உன்நினைவு உருக்குதம்மா நெஞ்சமதை.....

தாயுன்னை பிரிந்ததனால் தாங்காமல் தவிக்கின்றோம்
தரணியில் நாமிருந்து தவிப்பதுவோ சொல்லம்மா...
குடியிருந்த கோவிலது இடிவிழுந்து போனதம்மா
கண்ணீரே இனியெங்கள் காவியமாய் போகுமம்மா...

பொக்கிஷமாய் பொத்தி வளர்த்தாய் வள்ளி
பொலிவிழந்து போனதம்மா உன் பிள்ளைகள்
வெளி சென்றால் விழி வைத்து காத்திருப்பீர்
விபரம் கேட்பதுடன் உணவளிப்பாய் உவகையுடன்....

வாழ்க்கை கூடின்றி வடிவிழந்து போனதம்மா
தாய்ப்பறவை இல்லாது தவிக்குதம்மா குஞ்சுகள்.....
அன்பு வார்த்தைகளும் அழகான புன்னகையும்
அகலவில்லை தாயே அயராது எமைக்காத்த அன்னையே....

பாரமெல்லாம் நீ தாங்கி பக்தியுடன் எமை வளர்த்து
ஞானத் தெளிவினை ஊட்டி இன்பங்கள் நாம் காண
துன்பங்கள் சுமந்தாயே துயர் சூழாமல் காத்தாயே
மடிமேல் கண் துயின்றால் மாயமாய் துயர் களைவாய்

பத்துத் திங்கள் பார்த்திருந்து உயிர் தந்த உடலுக்கு
பத்து நாள் மட்டும் பணி செய்திடவா
இத்தரையில் பிறக்க வைத்தாய் - இனி
என்ன செய்திடுவோம் நாமெல்லாம்

பேறாகக் கண்ட பெருமையுடன் நாமிருந்தோம்
வையகம் துறந்து வானகம் ஏன் சென்றீர்
கனமழையாய் கண்களிங்கே கண்ணீரை சொரியுதம்மா
விழுதுகளாம் நாங்கள் விம்மியழுகின்றோம்

தெய்வமாய் ஆகிவிட்ட திருவுளமே எம்தாயே
தேன் சிந்தும் வார்த்தைகளால் அழைக்கும் தீஞ்சுடரே
தீராத துயர்தனைச் சுமந்தோம் உனைப் பிரிந்து
நெஞ்சை நெகிழ வைத்து வாழ்ந்து விட்டீர் நீங்காமல்

உமது ஆசி எமக்கு நின்றுமே நிலைக்க வேண்டும்
உன் ஆன்மா சாந்தி பெற
கண்ணீர் பூக்களையே காணிக்கை ஆக்குகின்றோம்.

*- பாசமிகு பிள்ளைகள்*

# தவமாய் பெற்ற மகன் தனியாய் தவிக்கின்றேன்

தேவதையாய் என் நெஞ்சில் பூத்த ஒளியே
நான் கண்ட முதல் தெய்வம் அம்மா
வரம் வேண்டி பெற்றெடுத்தாய், வையகத்தில் வாழவிட்டு
இடை வழியில் ஏன் சென்றாய் தாயே.....

ஐவர்களாய் அக்காமார் எனக்கிளைய
இரு தங்கை அற்புதமாய் நான் மகிழ
அனைத்திலும் முன்னிடம் நீ தந்தாய்
வளர்ந்தவனாய் நானிருந்தும் உன் பிள்ளை
சிறு பிள்ளையென்று செல்லமாய் பார்த்தாயே

வள்ளியென அழைத்தால் வாய் நிறைய சிரித்து
சிந்தை மகிழ்விப்பாய் சிறுநோயென்று எண்ணித்தான்
சிரிப்பும் காட்டி விட்டேன் சிறகொடிய
வைத்துவிட்டு சிவனடி சேரந்துவிட்டீர் - தாயே

உன் நினைவு நெஞ்சில் நெருப்பாய் எரியுதம்மா
நீங்காது என்னை விட்டு நிழலாய் இருந்து
காலமெல்லாம் காத்திடுவீர் கரம் கூப்பி
வணங்குகின்றோம் காவியமே சாந்தி பெறு.

# மருமக்கள் புலம்பல்

மாமி என அழைத்தால் மகன்
என்று மறுகணமே வந்துவிடும்
மகத்தான உறவுதனை
மறக்காமல் செய்துவிட்டீர்....

தீங்கு நினைக்காத திருவுளங் கொண்ட நீங்கள்
பாசத்தால் பாங்கான வாழ்வை பக்குவமாய் தந்துவிட்டீர்
மண்பூத்த மாமியே விண் பூத்து விட்டதனால்
உமைப் போன்ற ஒரு உறவை
கண்பூத்து காண்பதெங்கே இனி.....

பாசமொடு பலகாலம் நேசமொடு நெடுங்காலம்
பார்த்திருப்பாய் என்றெண்ணி நாமிருக்க
நோயொன்று வந்துன்னை நொடிப்பொழுதில்
அழைத்ததம்மா.........

என் சொல்லி கதறிடுவோம்
இனி எங்கே தேடிடுவோம்
ஆண்டுகள் போனாலும் ஆறாது உன் துயரம்
ஆன்மா சாந்தி பெற அனுதினமும் வேண்டுகின்றோம்.

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

எம் இனிய அம்மம்மாவே......

உம்மடியில் நாம் தவழ்ந்து உவகையுற்றோம்
அம்மம்மாவே...

பாசத்தால் எமை ஈர்த்து புழுங்கதைகள்
சொல்லியதும்

கண் போன்று எமை காத்து கருணையுடன்
சீராட்டியதும்

அன்பான வார்த்தைகளால் அரவணைத்து
உணவளித்த

நினைவுகளை நீங்காது நிறுத்திடுவோம்
இதயமது உள்ளவரை...

எமைவிட்டு பிரிந்தாலும் இணைந்திருப்பீர்

எம்முள்ளே இறைவியாய் என்றும்

# சகோதர சகோதரிகள் புலம்பல்

அண்ணன் என்று ஆசையுடன் அழைக்கும்
நாவும் அடங்கியதோ... ...
அன்பாக அக்காவை அழைத்த குரல் கேட்கவில்லை... ...
நேசமுள்ள நெஞ்சமதால் பாசமுள்ள
தங்கை எமை தாய் போல் பார்த்தாயே... ...

மோசமான பாசம்தனை கடவுள்தான் எமக்களித்தான்
பரிதவிக்கவிட்டு விட்டு பரமனடி சென்றாயே
உன் புன்னகை முகம் கண்டால் போகுமே சிறுகோபம்
பூமிதனில் நல்லவர்கள் நீண்ட நாள்
வாழ்வதில்லை என்று நாம் எண்ணிடவா நீ சென்றாய்

உன் பிரிவு உண்மைதான் ஆனாலும்
நடக்கவில்லை போலுள்ளது
வாசமாய் எம்முடன் கலந்துவிட்டகலாத
நறுமணம் ஆனாயே... ...
பாசக்கூட்டில் ஒரு பறவை ஒடிந்ததென வாடிநிற்கின்றோம்
மீண்டும் வந்து பிறப்பதற்காய் வருந்தி துதிக்கின்றோம்.
சோதரியே சாந்தி பெற மன்றாடி வேண்டுகின்றோம்

# பேறாமகனின் புலம்பல்...

அம்மாவுக்கு அடுத்த நிலை - என்றும்
ஆசையம்மா என்றழைத்தேன்
தேன் சிந்தும் திருமுகத்தால் - என்னை
உன் திருவாய் மலர்ந்தருளி
பிறப்புக்களின் உடன் பிறப்பாய் - பெற்ற
பிள்ளை என்றே எனை அழைத்து
பாசம் தனை பகிர்ந்து கொண்டு - இன்று
பரிதவிக்கவிட்டுச் சென்றதேனோ!

காலமவன் தேரினிலே அன்று - உன்
ஆயுள் கரை வந்தடைவான் - என்றறியேன்
மாயம் எனும் சூழ்ச்சி தனில் - இன்று
மறைந்தும் மறையாது நின்றதேனோ?
சோகம் நெஞ்சை உலுக்குதம்மா
சோர்வில் மனம் வரளுதம்மா
பாவம் உன்தன் பிள்ளைகளை
பதற விட்டுச் சென்றதேனோ?

பிள்ளைகளின் அழுகுரலால் - அன்று
காலனவன் நெஞ்சம் கலங்கியதோ
பிஞ்சுகளின் நிலை காப்பாய் - என்ற
பெருங்கனவை சிதைத்து விட்டு
சோகமதை சுமந்து - அன்று
சொந்தமெல்லாம் சூழ்ந்து நிற்க
காலமவன் தேரிலேறி - எமை
கலங்க விட்டு சென்றதேனோ?

கிருபாகரன்
பூமரத்தடிச்சேனை, ஈச்சிலம்பற்று.



அன்புதாய்க்கு எங்கள் அனுமதியின்றி
எப்படி வந்தது மரணம்

இந்த புன்னகை முகத்திற்கு
இத்தனை விரைவாய் யார் கொடுத்தது சாபம்

மகன், என்று அழைக்கும் ஒற்றைவார்த்தைக்குள்
எத்தனை ஆனந்தம் தந்தாயம்மா

உங்கள் பொன்சிரிப்பை
எங்கள் கண்களில் பதித்துவிட்டு
எங்கே சென்றீர்கள்

அமுதன்

# நீங்காத நினைவுகளில்

"முடிசார்ந்த மன்னரும் ஓர் பிடிசாம்பாலாவார்"
"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார்
வருவதில்லை மீண்டும்"
"பிறக்கின்ற போதே இறக்கின்ற தேதி
இருக்கின்ற தென்பது உண்மை"

(கற்றவற்றில் சில துளிகள்)

ஈழத்திருநாட்டில் பாடல் பெற்ற சிவபூமி திருமலை மாவட்டத்தின் கொட்டியாபுரபற்றின் முடிவில் மகாவலி ஆற்றினை ஆதாரமாகக் கொண்ட வெருகலம்பதியில் குறிஞ்சியும் மருதமும் ஒருங்கே அமைந்த ஆவின்பாலும், நெய்யும், முக்கனிகள் நிறைந்த ஆநெய்த்தீவு எனும் சிற்றூரில் வாழ்ந்த சிந்து நாட்டு வேளாளர் கந்தப்பர் காளிப்பிள்ளை தம்பதிகளின் தலைமகள் மாரிமுத்துவான கன்னிகையை, கோணேச்சரத்தின் மல்லிகை மலர் பறித்த முதுபெரும் கிராமம் மல்லிகைத்தீவான் வேளாளர் குலத்துப் பொதுப்பணியும் இறைபணியும் ஒருங்கமைந்த குடும்பத்தில் தோன்றியவரான கோணாமலை நல்லதம்பி என்னும் இளைஞனுக்கு கரம்பற்ற அருள்கூடியதால் குலத்தோடமைந்த அறப்பணி, பொதுப்பணி, தான தருமாங்கள் இயற்றி சீர் பெருக சிறப்புடன் வாழ்க்கை வளமாக வாழ்ந்து குளம்கட்டிப் பணிசெய்து புகழுடன் மறைந்தவர். அவர்தம் இல்லறப்பேறாய் கிடைத்த மக்கட் செல்வம் பதின்மர் ஆவார். இவர்களை அவையத்து முந்தியிருக்க வழிசமைத்தார்.

அவர்களின் செல்லப் பிள்ளையான கோமளம் பெயருக்கு ஏற்றபடி பெண்ணின் பெருந்தகையாய் மங்கையர் திலகமாய் நற்பண்புகள் அமைந்த அழகு சௌந்தரியானாள். பருவமங்கைக்கு ஈச்சிலம்பற்று உயர்வேளாளர் குடிவந்த முறை மாப்பிள்ளையாக காசிப்பிள்ளை செல்லம்மா தம்பதியின் கனிஷ்ட புதல்வன் பேரின்பராஜா (இன்பம்) என்பவரை முறைப்படி கரம்பிடித்தார். கணவருக்கேற்ற பண்புள்ள மனைவியாக இல்லத்தலைவியாக யாவராலும் போற்றப்பட்ட இவளுக்கு பண்போடமைந்த பிள்ளைச் செல்வங்கள் எண்வர் அவதரித்தார். அவர்களுக்கு கணவரின் ஆதரவோடு கல்வியூட்டி அறிவுள்ள பண்பாளராக்கினார். தம்பணி தளராது உற்றார், உறவினர் அனைவரையும் ஆதரித்து நற்பெயரோடு வாழ்ந்த சீமாட்டி சிவபதமடைய வேளை வந்தது போல் 55வது அகவையில் நோயின் பிடியில் சிக்கினாள். மீளவில்லை சிறுவயதினிலே எமைவிட்டுச் சென்ற கோமளவல்லியின் ஊனுடம்பு மக்கள், கணவர், உற்றார், உறவினர் ஓவென்று கதறியழ 01.11.2015இல் ஆநெய்த்தீவு இந்து மயானத்தில் சங்கமமானது. இவை என் நெஞ்சில் நீங்காத நினைவுகளாய் நிலைத்திருக்கும்.

அன்னாரின் ஆன்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றேன்.

இ. தர்மலிங்கம் J.P
(ஓய்வு அதிபர்)
பாரதிபுரம், கிளிவெட்டி
மூதூர்.

# விருட்சம் ஒன்று சரிந்தது

ஆநெய்த்தீவின் கண் ஆறுமுகன் அருட்பார்வை
நாளும் கொண்ட - நல்மாவுடன்
தெங்கும் பொழில் சூழ்ந்த - வள
ஊராம் சேனையூர் தனில் வாழ்ந்த

வேளாளர் குடிவந்த நல்லதம்பி - துணை
மாரிமுத்து பெற்றெடுத்த முத்தான
கோமளமே உன் வரவு - தரணிதனில்
உவகையுடன் வலம் வரவே

இல்வாழ்வதனை அமைத்திடவே - ஆரம்பக்
கல்வியுடன் நிறுத்தி விட்டு ஒழுக்கமதை
உயிராய் கொண்டு நீ உனக்கென
தனியிடம் பதித்தாய் நங்கையே

பண்பான நற்பதியாம் - நம்
செண்பகம் குடி கொண்டாட்சி செய்யும் - நல்
ஈர்சிலம்பதியதனில் வேளாளர் மரபு வந்த
காசிப்பிள்ளை செல்லம்மா ஈன்றெடுத்த

பேரின்பம் என்ற பெருமகனை கரம்
பிடித்து பேதங்கள் ஏதுமின்றி
நல் மக்கள் எண்வரைப் பெற்றெடுத்தீர்
இப்புவியில் புகழ் விளங்க

பண்பான பிள்ளைகளுக்கு பக்குவமாய் கல்வியூட்ட
உடலினை உரமாக்கி உயிரினை ஒளியாக்கி
பகல் இரவு பாராமல் விழித்து நீ பணி செய்தாய்
விரைந்து சென்ற மாயமென்ன
உன்பணியதனில் - இன்று
உயர் கல்வி கற்றவர்கள்
ஓங்கி எழும்போது - நீ
ஓய்வெடுத்து சென்றதேனோ

காலன் என்ற கொடியவன் - உன்
கனிவான வாழ்வதனை பொறுத்திட முடியாது
கடுகதியில் உன் உயிரை கவர்ந்து சென்றதேனோ
சோகத்தால் என் கணவர் சோர்வடைந்து நிற்கின்றார்
சோதனை உன்றெண்ணி - உன்மக்கள்
தேம்பி அழுகின்றார் - உன்
உறவுகள் கூடி ஒப்பாரி வைக்கின்றார் - நீ
இவர்துயர் போக்க மீண்டு வருவாயாக
உன் ஆத்மா சாந்திக்காய் இறைவனை
இறைஞ்சுகின்றேன்.

ஓம் சாந்தி

திரு.வி. அருள்நேசராசா
அதிபர்
தி/மூ/ஸ்ரீ சண்பகா மகா வித்தியாலயம்

# அம்மா எங்கு சென்றனையோ!

இன்பம் மாமா தன்னுடனே
இணைந்து வாழ்ந்த இல்லறமே!
இறைவன் இட்ட கட்டளையை
இனிய வாழ்வாய்க கொண்டவரே!

ஆல் பொல் விரிந்த பெருங்குடியில்
அழகு நிலவாய் தவழ்ந்தவரே!
அன்பை பொழிந்து அரவணைத்த
அன்னை எங்கு சென்றனையோ!
இளவல் உங்கள் ஜெகதீசன்
இன்னும் மேனா கிருக்ஷாவுடன்
இருக்கும் இளைய சோதரிகள்
எப்படி நாங்கள் தேற்றுவது

வெருகல் முருகன் சந்நிதியில்
அடியவராகிப் பணிசெய்த
தொண்டர் எம்மை அன்பு செய்து
அமுதுங்கூட அளித்தீர்கள்

காலம் கொடுமை செய்யவில்லை
காலன் கொடுமை செய்யவில்லை
ஏகன் இறைவன் சொன்னவைதான்
இங்கே நடந்து முடிகின்றது

காயம் என்னும் உடம்பென்றும்
காற்றால் அடைத்த பையன்றோ!
என்றோவொருநாள் பயனின்றி
வெடித்து வெறுமையாகின்றது

என்றும் உள்ள ஆத்மாவோ
இறைவன் அடியைச் சேர்கிறது
நன்றே செய்து வாழ்ந்தோர்கள்
தவிர மீதிப்பேரெல்லாம் மீண்டும்
இங்கே பிறக்கின்றோம்

அம்மா நீங்கள் ஒருபோதும்
அதுபோல் பிறக்க மாட்டீர்கள்
என்றும் இன்பம் தரவல்ல
சொர்க்கம் சேர்ந்து வாழ்வீர்கள்

அங்கே உம்மை காணும் வரை
இங்கே இருந்து இறைஞ்சுகின்றோம்
அன்புத்தாயே அங்கிருந்து
ஆசீர்வாதம் செய்யுங்கள்

சித்திரவேல் கணேஷ்
மற்றும் குடும்பத்தார்
இலங்கைத்துறை முகத்துவாரம்.

# அன்னையின் நினைவுகளால்...

"நம்மைப் பெற்றவள் நம்மால் மீண்டும்
பெறமுடியாதவள் தாய்"

"நாள் எல்லாம் பட்டினியாய் கிடந்திடுவாள்
ஒரு நாளிகை நம்பசி பொறுக்கமாட்டாள் தாய்"

"ஓர் சொல்லில் ஓர் உலகம் அம்மா
உலகெல்லாம் ஓர் சொல்லும் அம்மா"

"நம் உள்ளத்தின் உள்ளே வாழும் ஓர்
உன்னதமான தெய்வம் நம் அம்மா"

"உயிர் எழுத்தில் "அ" எடுத்து
மெய் எழுத்தில் "ம்" எடுத்து
உயிர்மெய் எழுத்தில் "மா" எடுத்து
அழகுதமிழில் கோர்த்தெடுத்த முத்து "அம்மா"

"எம் அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை"

"மகள்...... மகனே........செல்லம்........எனக்கூறும்
வார்த்தைகளால் உள்ளக்களிப்புற்றோம் தாயே"

# பட்டினத்தார் பாடல்

(அன்னை காலமான பின், தகனக்கிரியை செய்யும் போது பாடிய பாடல்கள்)

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச் - செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்தி கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி?

முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்தி பகலாய்ச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டுவேன்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன்!

நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டுவேன்!

அரிசியோ நான் இடுவேன்? ஆத்தாள் உனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு?

அள்ளிஇடுவது அரிசியோ? தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்? - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு
முன்னை இட்டதீ முப்புரத்திலே
பின்னை இட்டதீ தென் இலங்கையிலே
அன்னை இட்டதீ அடிவயிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே!

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுமே பாவியேன் ஐயகோ! - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ - சந்தமும்
உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்துஎன்
தன்னையே ஈன்றெடுத்த தாய்!

வீற்றிருந்தாள் அன்னை, வீதிதனில் இருந்தாள்!
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் - பால்தெளிக்க
எல்லோரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்!

# நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை

## சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி | 10 | உலகசிரிப்பு தினம் |
| ஜனவரி | 31 | உலக தொழுநோயாளர் தினம் |
| பெப்ரவரி | 14 | உலக காதலர் தினம் |
| மார்ச் | 08 | சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் | 15 | உலக ஊனமுற்றோர் தினம் |
| மார்ச் | 21 | உலக வளதினம் |
| மார்ச் | 22 | உலக நீர் தினம் |
| மார்ச் | 23 | உலக வளிமண்டலவியல் தினம் |
| மார்ச் | 24 | உலக சயரோக தினம் |
| மார்ச் | 27 | உலக நாடக தினம் |
| ஏப்பிரல் | 07 | உலக ஆரோக்கிய தினம் |
| ஏப்பிரல் | 15 | உலக நூலக தினம் |
| ஏப்பிரல் | 17 | உலகரத்த தினம் |
| ஏப்பிரல் | 18 | உலக மரபுரிமை தினம் |
| ஏப்பிரல் | 22 | உலக பூமி தினம் |
| ஏப்பிரல் | 23 | உலக புத்தக தினம் |
| ஏப்பிரல் | 26 | உலக பாதிக்கப்பட்ட சிறுவர் தினம் |
| மே | 01 | உலக தொழிலாளர் தினம் |
| மே | 03 | உலக பத்திரிகை சுதந்திர தினம் |
| மே | 02 | ஞாயிறு உலக தாய் தினம் |
| மே | 08 | உலக செஞ்சிலுவை தினம் |
| மே | 07 | உலக முஸ்லிம் தினம் |
| மே | 12 | உலக தாதியர் தினம் |
| மே | 13 | உலக அன்னையர் தினம் |
| மே | 15 | உலக குடும்ப தினம் |
| மே | 17 | உலக தகவல் தொடர்பு தினம் |
| மே | 24 | பொதுநலவாய தினம் |

| | | |
|---|---|---|
| மே | 31 | புகைத்தல் எதிர்ப்புத் தினம் |
| யூன் | 01 | உலக குழந்தைகள் தினம் |
| யூன் | 04 | இடக்கு முறைக்கு எதிரான தினம் |
| யூன் | 05 | உலக சுற்றுச் சூழல் தினம் |
| யூன் | 17 | உலக தந்தையர் தினம் |
| யூன் | 26 | போதைப் பொருள் தினம் |
| யூன் | 27 | உலக சலரோக தினம் |
| யூலை | 11 | உலக மக்கள் தொகை தினம் |
| யூலை | 28 | உலக அகதிகள் தினம் |
| ஆகஸ்ட் | 06 | கிறோசிமா அணுகுண்டு தினம் |
| ஆகஸ்ட் | 09 | நாகசாகி அணுகுண்டு தினம் |
| செப்ரெம்பர் | 02 | உலக டெங்கு தினம் |
| செப்ரெம்பர் | 03 | சர்வதேச சமாதான தினம் |
| செப்ரெம்பர் | 08 | உலக எழுத்தறிவு தினம் |
| செப்ரெம்பர் | 13 | தாத்தா பாட்டி தினம் |
| செப்ரெம்பர் | 16 | உலக ஓசோன் தினம் |
| செப்ரெம்பர் | 26 | செவிப்புலன் அற்றோர் தினம் |
| செப்ரெம்பர் | 27 | உலக சுற்றுலா தினம் |
| ஒக்ரோபர் | 01 | உலக சிறுவர்,முதியோர் தினம் |
| ஒக்ரோபர் | 03 | உலக குடியிருப்பு தினம் |
| ஒக்ரோபர் | 04 | உலக விலங்கு தினம் |
| ஒக்ரோபர் | 05 | உலக உறைவிட தினம் |
| ஒக்ரோபர் | 06 | உலக ஆசிரியர் தினம் |
| ஒக்ரோபர் | 09 | உலக தபால் நிலைய தினம் |
| ஒக்ரோபர் | 10 | உலக உள நல தினம் |
| ஒக்ரொபர் | 12 | உலக கண் பார்வை தினம் |
| ஒக்ரோபர் | 13 | உலக இயற்கை அனர்த்த தினம் |
| ஒக்ரோபர் | 14 | உலக தரதினம் |
| ஒக்ரோபர் | 15 | வெள்ளைப் பிரம்பு தினம் |
| ஒக்ரோபர் | 16 | உலக உணவு தினம் |
| ஒக்ரோபர் | 17 | வறுமை ஒழிப்பு தினம் |

| | | |
|---|---|---|
| ஒக்ரோபர் | 21 | அயடீன் குறைநீக்கல் தினம் |
| ஒக்ரோபர் | 23 | உலக ரத்ததான தினம் |
| ஒக்ரோபர் | 24 | ஐ.நா.தினம் |
| ஒக்ரோபர் | 31 | உலக சிக்கன தினம் |
| நவம்பர் | 09 | சட்ட சேவைகள் தினம் |
| நவம்பர் | 16 | உலக பொறுமை தினம் |
| நவம்பர் | 17 | உலக மாணவர் தினம் |
| நவம்பர் | 26 | உலக சட்ட தினம் |
| டிசம்பர் | 01 | உலக எயிட்ஸ் தினம் |
| டிசம்பர் | 10 | மனித உரிமை தினம் |
| டிசம்பர் | 23 | உலக விவசாய தினம் |

## தெரியாத செய்திகள்

1. படுத்து உறங்கத் தெரியாத மிருகம் குதிரை
2. நிறவேறுபாடு தெரியாத மிருகம் நாய்
3. பறக்கத் தெரியாத பறவை பெண்குயின்
4. குதித்து ஓடத் தெரியாத மிருகம் யானை
5. கீழ்த் தாடையை அசைக்கத் தெரியாத விலங்கு முதலை
6. பார்வை தெரியாத புகழ் பெற்ற கவிஞர் மில்டன்
7. எழுத படிக்கத் தெரியாத ஸ்கொட்லாந்து கவிஞர் பங்கன்மார்க்.

## இல்லாத செய்திகள்

1. பறவைகளுக்கு பற்கள் இல்லை.
2. சுண்டெலிக்கு வியர்ப்பதில்லை.
3. பல்லி தண்ணீர் அருந்துவதில்லை.
4. எலிகள் இல்லாத நாடே இல்லை.
5. ஒட்டகத்திற்கு பித்தப்பை இல்லை.
6. குயில்கள் குளிர் காலத்தில் கூவுவதில்லை.

## நல்லதை எடுத்துக்கொள்

1. வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான் - அதிகம் கதைப்பதனால் சக்தி இழக்கின்றான்.

2. மலையளவு உபசாரம் செய்தாலும் கடுகளவு அபகாரம் செய்யாதே.

3. தீயோனுக்கு நல்லோனாக இருந்தாலும் இரு நல்லோருக்கு மட்டும் தீயோராக இராதே.

4. சொர்க்கம் தாயின் இருபாதங்களுக்கு அடியில் இருக்கிறது..

5. அறிவாளி ஒருவன் கெட்டதையும் ஏற்று சிந்திக்கத் தொடங்குகின்றான்.

6. பார்த்தவுடன் புரிந்து கொள்பவன் ஞானி பழகாமல் புரிந்து கொள்பவன் அறிவாளி பழகிப் புரிந்து கொள்பவன் ஏமாளி.

7. உன்னைவிட மேலானது எல்லா வகையிலும் உண்டு என்பதை மறக்காதே நானே எல்லாவற்றிலும் உயர்ந்தவன் என்பதை மறந்துவிடு.

8. ஏற்காதவனுக்கு அறிவுரை வழங்காதே அது உனக்கே ஆபத்தைக் கொண்டு வரும்.

9. பல வழிகளிலும் வருமானத்தைத் தேடும் ஒருவனால் தான் அநேகர் ஏமாற்றப்பட்டிருப்பார்கள்.

10. நோய் இல்லை என்று மனதில் உறுதி செய். மனம்போல் உடல் அமையும்.

## உலகில் மிகப் பெரியவை

1. பாலைவனம் - சகாராப் பாலைவனம்
2. தீவு - கிறீன்லாந்து
3. விலங்கு - நீலத் திமங்கலம்
4. நீண்ட சுவர் - சீனப் பெருஞ் சுவர்
5. சிலை - நியூயோர்க் சுதந்திரசிலை
6. உயரமான மலை - இமயமலை
7. பெரிய வளைகுடா - மெக்சிக்கோ
8. பெரிய கடல் - தென் சீனக்கடல்
9. பெரிய தீபகற்பம் - அராபியா
10. உயரமான நீர்வீழ்ச்சி - ஏஞ்சல்
11. அகலமான நீர்வீழ்ச்சி - கோகண நீர்வீழ்ச்சி
12. உயரமான ஏரி - டிட்டிக்கா ஏரி
13. ஆழமான ஏரி - பேகல்
14. கோபுரம் - ஈபிள் கோபுரம்
15. நாடு - ரஷ்யா
16. விரிகுடா - ஹட்சன்
17. பீடபூமி - தீபெத்
18. நீளமான நதி - அமேசன்
19. பெரிய கழிமுகம் - வெல்டா
20. உயரமான இடத்திலுள்ள எரிமலை - அண்டிஸ் மலையிலுள்ள பொட்டப்பக்சி
22. நீளமான வீதி - பிண் அமெரிக்கன் வீதி
23. அகலமான வீதி - புரோட்வே

## பலவகை அறிவு

1. ஓரறிவுள்ளவை - புல், மரம்
2. ஈரறிவுள்ளவை - நத்தை, சிற்பி, சங்கு
3. மூன்றறிவுள்ளவை - எறும்பு, கறையான்
4. நான்கறிவுள்ளவை - தும்பி, வண்டு
5. ஐந்தறிவுள்ளவை - மிருகம், பறவைகள்
6. ஆறறிவுள்ளவை - மனிதன்

## மனிதனது ஆறறிவுகள்

உணர்ந்தறிவு, சுவைத்தறிவு, பார்த்தறிவு, முகத்தறிவு, கேட்டறிவு, பகுத்தறிவு

## பரிபாலன அலகுகளும் பொறுப்பான அதிகாரிகளும்

1. நாடு - ஜனாதிபதி
2. மாகாணம் - ஆளுநர்
3. மாவட்டம் - அரசாங்க அதிபர்
4. பிரதேசம் - பிரதேச செயலாளர்
5. கிராமம் - கிராம சேவையாளர்
6. பரீட்சை திணைக்களம் - ஆணையாளர்
7. அஞ்சல் திணைக்களம் - தபால் அதிபர்
8. பல்கலைக்கழகம் - உபவேந்தர்
9. வங்கிகள் - முகாமையாளர்

# ஐந்தின் மகிமை

| | | | |
|---|---|---|---|
| 1. | பஞ்ச உலோகம் | - | இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி, பொன் |
| 2. | பஞ்ச இலக்கணம் | - | எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி |
| 3. | பஞ்ச இரத்தினம் | - | சுகர்தி, பொன், பொருள், மாணிக்கம், மரகதம் |
| 4. | பஞ்சசீலம் | - | கொல்லாமை, கல்லாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை, காமமின்மை |
| 5. | பஞ்சகௌவியம் | - | தயிர், நெய், பால், கோமயம், கோசலம் |
| 6. | பஞ்சகாவியம் | - | சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி |

# நன்றி நவில்கின்றோம்.



வெங்கொடுமைச் சாக்காட்டின்
விளைதுயரால் துடிதுடித்து
இங்கொடுமை தனைக்கண்டு
இரக்கமுடன் ஓடிவந்து
பங்கு கொண்டு பரிதவித்துப்
பணிபுரிந்த உற்றார் உறவினர்
அயலவர் அனைவருக்கும்
பகலிரவாய் எம்துயரில்
பகிர்ந்த பற்றாளர்களுக்கும்
பொங்கிவரும் பேருணர்வால்
நவில்கின்றோம் எம் நன்றி

கணவர், பிள்ளைகள்
மருமக்கள், குடும்பத்தினர்

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



